DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனபால் | Caste | : | |
| Father Name | : | பாலசுப்ரமணியம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **02.06.2026.**

**PW - 10**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், ராக்கம்பட்டியில் வசிக்கிறேன். முசிறி தாலுக்கா, அய்யம்பாளையத்தில் APS என்ற செங்கல் சூளையில் வேலை செய்கிறேன். அ.சா.9 சண்முகம் அதன் உரிமையாளர். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி மேற்படி செங்கல் சூளையில் எங்களுடன் வேலை பார்த்தார். எதிரியின் கணவர் பெயர் பிரபு. அவர் தான் வழக்கில் இறந்தவர். மேற்படி பிரபுவும் ஆஜர் எதிரியும் சேர்ந்து தான் எனது செங்கல் சூளையில் பணி செய்தார்கள். மேலும், லட்சுமி, ராஜு ஆகியோரும் மேற்படி செங்கல் சூளையில் வேலை செய்தார்கள். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு காவேரியில் தண்ணீர் வந்த சமயத்தில் மேற்படி பிரபு இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவர் எப்படி, எங்கு இறந்தார் என்பது தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)*

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி பிரபு, எதிரியின் 2வது கணவர் என்றால் எனக்கு தெரியாது. ரேகாவிற்கு கனிஷ்கா, ரேவதி ஆகிய மகள்கள் உள்ளனர் என்றால் அதுபற்றி தெரியாது. போலிஸ் விசாரணையின்போது 27.02.2022 இரவு 9 மணியளவில் செங்கல் சூளையில் ரேகா இருந்தபோது பிரபு, ரேவதியை பலாத்காரம் செய்ய முயற்சித்தார் என்றும், அப்போது ரேவதி அருவாளால் பிரபுவை வெட்டியும், வாதாமடக்கி கட்டையால் அடித்து பிரபுவை கொலை செய்து காவேரி ஆற்றில் தள்ளிவிட்டதாக எதிரி ரேகா, ராஜுவிடமும், லட்சுமியிடமும் சொன்னதாக அவர்கள் இருவரும் என்னிடம் சொன்னார்கள் என்றும், அதை நான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி என்னுடன் வேலை பார்த்தவர் என்பதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.